## 28.16 உயர்நிலைக் குழு பரிந்துரைகள் – சமூக சொத்துக்களை பேணுதல் என்ற தலைப்பில் அரசு ஏற்றுக் கொண்டவை மீது அரசு ஆணை வெளியிடப்படுகிறது

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 105 நாள் : 22.06.1999

படிக்க :

அரசு ஆணை (நிலை) எண்.297 ஊரக வளர்ச்சித் துறை, நாள்.29.09.1997

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராக கொண்டு உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.01.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 03.05.1999 மற்றும் 04.05.1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டங்களில் பரிசீலிக்கப்பட்டன.

2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளிலும் மற்றும் வெளியிடப்பட்ட செயல் ஆணைகளிலும் கிராம ஊராட்சியில் உள்ள பல்வேறு சமூக சொத்துக்களை கண்டறிந்து கிராம ஊராட்சிகள் பதிவேட்டில் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அசையா சொத்துக்களைத் தனியாக பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்க அரசு ஆணை (நிலை) எண்.92, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.26.03.1997–ல் ஆணையிடப்பட்டுள்ளது. வணிக மற்றும் பிற சொத்துக்களுக்கான வரி, வாடகை உபயோகிப்போர் கட்டணம் நிர்ணயிக்க மற்றும் வசூலிக்க கிராம ஊராட்சிகளுக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு எண்.188ல் அதிகாரம் செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிப் பகுதியிலுள்ள சொத்துக்களை குத்தகைக்கு விட்டு வாடகை வசூலிக்க தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும் அரசு செயல் ஆணையிலும் வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமூக சொத்துக்களை மேம்படுத்தவும் பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களையும் நன்கொடையாகப் பெறுவதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 124–ல் வழி வகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின் சொத்துக்களை பராமரிப்பதற்கு தேவையான பராமரிப்பு செலவினங்களை மாநில நிதிக்குழு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கும் நிதியில் பயன்படுத்திக் கொள்ளலாம். எனினும் கூடுதல் நிதி திரட்ட வருமானம் ஈட்டும் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நிதி நிறுவனங்களிடம் கடன் உதவி பெற, தற்போது சட்டத்தில் இடமில்லை. எனவே இதற்குரிய சட்டத் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். வணிக மற்றும் பிற சொத்துக்களுக்கான வரி, வாடகை மற்றும் கட்டணம் ஆகியவற்றை ஊராட்சிகள் சட்டம் பிரிவு எண்.186ன் படி வசூலிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சமூக சொத்துக்களை மேம்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களை நன்கொடையாக, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தர்ம ஸ்தாபனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் பெற ஊராட்சிகள் சட்டம் பிரிவு 124ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முன்னாள் ஜில்லா போர்டுக்கு சொந்தமான கட்டிடங்கள் நிலங்கள், பிற சொத்துக்கள் சிலவற்றை மட்டும் ஊராட்சி ஒன்றியங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற, பிற துறைகளுக்கு, ஒப்படைக்கப்பட்ட முன்னாள் ஜில்லா போர்டுக்கு சொந்தமான சொத்துக்களை மீள எடுக்கும் பொறுப்பை மாவட்ட ஊராட்சிக்கு வழங்க இனவாரியாக அரசு பரிசீலனை செய்யும் தங்கள் பொறுப்பிலுள்ள சொத்துக்களை மேம்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்களிடமிருந்து நன்கொடைகளை பெற ஊராட்சிகள் சட்டம் 124ல் வழி வகை உள்ளது.

3. உயர்நிலைக் குழுவின் அறிக்கை இயல் III–29 சமூகச் சொத்துக்களை பேணுதல் என்ற தலைப்பில் உள்ள பரிந்துரைகளில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளபடி கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு இணைப்பில் கண்டவாறு கூடுதல் அதிகாரங்கள் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணையையும் இதன் கூடிய இணைப்புகளையும், அனைத்து கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**

அரசு செயலாளர்

**இணைப்பு**

**சமூக சொத்துக்களை பேணுதல் குறித்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் கூடுதல் அதிகாரங்கள்**

**கிராம ஊராட்சிகள்**

1) ஊராட்சி ஒன்றிய பகுதியிலுள்ள, சமூக சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதும், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருப்பதுடன், அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அந்தந்த கிராம ஊராட்சிகள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

1) ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான வருமானம் ஈட்டக்கூடிய எந்தவிதமான சொத்துக்களையும் பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடலாம். அதற்கான வாடகைத் தொகை குத்தகைத் தொகை நிர்ணயிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. இதற்கான விளக்கங்கள் ஊராட்சிகள் சட்ட விதிகளிலும் அரசு செயல் ஆணைகளிலும் உள்ளது.

2) சமூக சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தாமல் மேற்பார்வையிடுவதும் ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தலும், அவ்வாறு நடந்தால், தேவையான நேரத்தில் அதற்கான சட்டப்படி நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளலாம்.

**மாவட்ட ஊராட்சிகள்**

1) வணிக மற்றும் இதர சொத்துக்களுக்கான வரி வாடகை உபயோகிப்போர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயித்து அவற்றை வசூலிக்கலாம்.

2) மாவட்ட ஊராட்சிகள் சொத்துக்களை, குத்தகைக்கு விட்டு அதற்குண்டான வாடகை வசூலிக்கலாம்.

3) மாவட்ட ஊராட்சிகள், சமூக சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதுடன், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருந்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்